செய்தி வெளியீடு எண்.326　　　　　　　　　　நாள் 12–04–2010

<u>செய்தி குறிப்பு</u>

## மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று 12.04.2010 சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் கனரக ஊர்தி ஓட்டுநர் 18 பேர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

அரசால் அறிவிக்கப்படுகின்ற பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை விரைந்து செயல்படுத்திடவும், அத்திட்டங்களின் பலன் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடையும் வகையில் அரசு இயந்திரத்தின் நிர்வாகத் திறனை மேம்படுத்திடவும் அரசால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வகையில் அரசுப் பணிகளில் தேவையான அளவு புதிய பதவிகளை ஏற்படுத்துவதிலும், ஏற்கனவே உள்ள பதவிகளிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதிலும் தமிழக அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது.

சென்னை மாநகரின் கழிவு நீரகற்று அமைப்புகளில் ஏற்படும் அடைப்பினை நீக்குவதற்கும், கழிவுநீர் அமைப்பினை சுத்தம் செய்வதற்கும் தொழிலாளர்கள் கழிவு நீரகற்று அமைப்பிலுள்ள ஆள்நுழைவாயில்களில் இறங்குவதை சென்னை உயர் நீதிமன்றம் தடை செய்துள்ள நிலையில், இயந்திரங்களின் உதவி கொண்டு கழிவுநீர் அடைப்புகளை நீக்க அரசு முடிவு செய்தது

சென்னைக் குடிநீர் வாரியத்தில் கழிவுநீர் அமைப்பில் ஏற்படும் அடைப்புகளை நீக்குவதற்கு ஏற்கனவே வாரியத்தில் 45 ஜெட் ராடிங் இயந்திரங்கள் (jet rodding machine) உபயோகத்தில் உள்ளன. மேலும் 11 ஜெட் ராடிங் இயந்திரங்கள்,

2009 –10 ஆண்டிற்கான (பகுதி–2) திட்டத்தின் கீழ் (part 2 scheme) கொள்முதல் செய்யப்பட்டு தற்போது உபயோகத்தில் உள்ளன. ஆக மொத்தம் 56 இயந்திரங்கள் தற்போது பயன்பாட்டில் உள்ளன.

கூடுதலாக 25 ஜெட் ராடிங் இயந்திரங்கள் மற்றும் 3 உறுஞ்சும் இயந்திரங்களும் (super suction machine) வாங்குவதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்துவருகிறது, இந்த இயந்திரங்களை இயக்குவதற்கு கூடுதலாக ஓட்டுநர்கள் தேவைப்படுவதால் வாரியம் கூடுதலாக 27 ஓட்டுநர்களை தேர்வு செய்ய முடிவு எடுத்தது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், அவர்கள் இன்று (12.4.2010) தலைமைச் செயலகத்தில் வேலை வாய்ப்பகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 நபர்களுக்கு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் கனரக ஊர்தி ஓட்டுநர்களாக பணி நியமன ஆணையும் தனிப்பட்ட வாழ்த்துக் கடிதமும் வழங்கினார்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புகின்ற வகையில் கருணை அடிப்படையில் வாரிசுதாரர்களுக்கு ஜீலை 2007ல் 22 பேர்களும், ஜனவரி 2008ல் 33 பேர்களும், மே 2008 ல் 35 பேர்களும், டிசம்பர் 2008ல் 108 பேர்களும் ஆக மொத்தம் 198 பேர்களில் 7 இளநிலை உதவியாளர்களும் 2 தட்டச்சர்களும், 189 களப்பணியாளர்களும் நியமிக்கப்பட்டனர். மேலும் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பிப்ரவரி 2007ல் 50 பேர்களும், மார்ச் 2009ல்

13 பேர்களும், உதவிப் பொறியாளர்களாகவும், பிப்ரவரி, மார்ச் 2008ல் 3 வரைவாளர்களும் மற்றும் ஆய்வக தொழில் நுட்ப பணியாளர் நிலை IIல் 3 பேர்களும் , பிப்ரவரி 2010ல் 65 உதவிப் பொறியாளர்களும் , தற்போது கனரக ஊர்தி ஓட்டுநர்களாக ஆணை வழங்கப்பட்டுள்ளவர்களையும் சேர்த்து மொத்தம் 354 பணியிடங்கள் நிரப்பப்பட்டு பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியின் போது டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., அரசு செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, திரு. சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் வாரிய உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.